1973 ஆகஸ்ட் 6]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, செய்திச் சுருளில் பணத்தை விளக்குவது என்று சொல்வதோ அல்லது செய்திச் சுருளை விளக்குவது என்று சொல்வதோ தவறு என்று நான் கருதுகிறேன். அதற்கும் இந்த கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. ஹோசூரில் ஒரு கால்நடைப் பண்ணை நீண்டகாலமாகவே நடைபெற்றுவருகிற காரணத்தால், இந்தத் திட்டம் அங்கே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு ஏ. எம். இராஜா: ஹோசூரில் நடத்தப்படுகின்ற இந்தப் பயிற்சித் திட்டத்தில் பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகியவை பற்றிய பயிற்சிதான் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இப்போது நாம் விவசாயத்தை 'மெகனேஸ்' பண்ணுவது என்று சொல்லக் கூடிய இந்த நேரத்தில் டிராக்டர் ரிப்பேர், ஸ்பிரேயர் ரிப்பேர் போன்ற பயிற்சிகளும் கொடுக்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அந்தப் பயிற்சிகள் விவசாயத் துறையில் கொடுக்கப்படுகின்றன. இது கால்நடை வளர்ப்புப் பயிற்சி. இதற்கு அந்தப் பயிற்சிகள் தேவையில்லை.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ஒரத்தநாட்டில் நீண்டகாலமாக ஒரு கால்நடைப் பண்ணை இருந்துவருகிறது. அங்கும் இந்தப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, அதற்குத் தனிக் கேள்வி தேவை.

Regulated Markets in Madurantakam and Uthiramerur

*42 *Q.*—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up regulated markets at Madurantakam and Uthiramerur in Chingleput district; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஏற்கனவே மதுராந்தகம், உத்திரமேரூர் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் 31—1—1973 அன்று திறக்கப்பட்டுவிட்டன.

Tiruchirappalli as Corporation.

* 43 *Q.*—THIRU N. DENNIS THIRU P. SOUNDARAPANDIYAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Tiruchirappalli Municipal Council has requested the Government to upgrade the Municipality into a Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) திருச்சி நகர மக்கட்தொகையும் நகராட்சியின் வருவாயும், ஒரு மாநகராட்சியாவதற்கு வேண்டிய தகுதி பெற்று இருப்பதால், திருச்சி நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்தக் கோரி, திருச்சி நகர் மன்றம் 10—5—1973-ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, முனிசிபாலிட்டிகளை அப்கிரேட் செய்யும் விதத்தில் அவ்வப்போது பரிசீலனை செய்யப் படுகின்றதா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பரிசீலனை செய்யப் பட்டுத் தான் உத்தரவுகள் அனுப்பப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தக் கோரிக்கைக்கு எப் பொழுது முடிவெடுக்கப்படும்? அதில் ஸ்ரீரங்கத்தையும் சேர்க்க உத்தேசம் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தின் மக்கட்தொகையோடு பக்கத்திலே இருக்கிற திருவெறும்பூர் போன்ற பகுதிகளையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மற்றவற்றையும், எதை எதை சேர்க்கலாம் என்பதைப் பற்றி இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை செய்யப்பட்ட பிறகு முடிவு அறிவிக்கப்படும்.